# உரிமமற்ற 11 அந்நிய வணிகர்களின் வர்த்தகப் பொருட்களை மாநகர் மன்றம் பறிமுதல் செய்தது

**நமது நிருபர்**

கோலாலம்பூர், ஏப்.3-
தலைநகரைச் சுற்றியுள்ள சில முக்கிய இடங்களில் உரிமமற்ற 11 அந்நிய வணிகர்களின் வர்த்தகப் பொருட்கள் மீது அமலாக்க நடவடிக்கையை கோலாலம்பூர் மாநகர் மன்றம் மேற்கொண்டது.

அந்நிய வணிகர்களுக்கான இச்சிறப்பு நடவடிக்கை ஜாலான் பெட்டாலிங், ஜாலான் துன் தான் சியூ சின், லெபோ புடு, ஜாலான் பி.ரம்லி, மஸ்ஜிட் ஜாமெக், கேஎல்சிசியின் முன்பகுதி, புக்கிட் பிந்தாங், பவிலியன் பேரங்காடி ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டது.

சிறு வணிகர்கள் உரிம சிறு சட்டப் பிரிவின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இவர்கள் எந்த



சட்டப்பூர்வமான உரிமமுமின்றி உடைகள், உணவுகள், பானங்கள் ஆகியவற்றை விற்கின்றனர்.

பறிமுதல் செய்யப்பட்ட வர்த்தகப் பொருட்கள் அனைத்தும் ஆவணப்படுத்தல் மற்றும் மேல் விசாரணைக்காக செராஸ், தாமான் மிஹார்ஜாவிலுள்ள மாநகர் மன்றத்தின் பறிமுதல் கிடங்கிற்கு மாற்றப்பட்டன என்று மாநகர் மன்றம் ஓர் அறிக்கையில் குறிப்பிட்டது.